

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் கழக தீர்மானக் குழுச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா. கார்த்திக் தனது துணைவியாரும் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலக் குழுத் தலைவருமான இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்குடன் சென்று ஆகஸ்ட் 24–அன்று கோவையில் நடைபெறும் தமது புதல்வி ஐஸ்வர்யா மணவிழா வரவேற்பு அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.




சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (27.06.2026) மாலை GenZ DMK கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி, அண்ணா நகர், ஆயிரம் விளக்கு, தியாகராயர் நகர், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 27 வயதுக்குட்பட்ட இளம் தலைமுறையினர் பங்கேற்றனர். இந்நிகழ்வின் போது 'படம் பார்த்து கதை சொல்லு', போலி செய்திகளை வெளிப்படுத்தி, உண்மையை சரிபார்க்க Fact check, சமகால அரசியலைப் பகடி செய்யும் Sofa–பேரவை, அரசியல் பதிவுகளை சமூக வலைதளத்தில் வெளிப்படுத்தும் வகுப்பு எனப் பல்வேறு தலைப்புகளின் கீழ் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சி, எழுச்சியுடன் நடைபெற்றது.

### டி.ஆர்.பாலு எம்.பி.–கனிமொழி கருணாநிதி எம்.பி. – ஆ. இராசா எம்.பி.–கலைஞானி கமலஹாசன் எம்.பி. – கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்துரை!

# பேராசிரியர் சு.கிருஷ்ணசாமி இல்ல மணவிழா!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. – விடுதலை விரும்பி – அந்தியூர் செல்வராஜ் – க.ஈசுவரசாமி எம்.பி. – கணபதி பி. ராஜ்குமார் எம்.பி பங்கேற்பு!

கோவை, ஜூன் 29-

தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற முன்னாள் உறுப்பினர் செயலர் பேராசிரியர் முனைவர் சு. கிருஷ்ணசாமி - தமிழ்நாடு சுகாதாரத்துறை இளநிலை நிர்வாக அதிகாரி (ஓய்வு) க. புவனேஸ்வரி ஆகியோரின் புதல்வர் கே. பரத் சூர்யா - கே.மனோசித்ரா ஆகியோரின் திருமணம் 2.07.2026 வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் கோயம்புத்தூர் தெலுங்கு பாளையம் ஸ்ரீ வாசவி மிரா மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவில் முன்னாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மூத்த வழக்கறிஞர் விடுதலை விரும்பி, கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமணத்தில் க. ஈசுவரசாமி எம்.பி., கணபதி பி.ராஜ்குமார் எம்.பி., என். ராமகிருஷ்ணன், எஸ். கார்த்திராஜ், கொடை வள்ளல் ஓ. ஆறுமுகசாமி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

**மணவிழா வரவேற்பு!**

இம்மணவிழா வரவேற்பு 4.7.2026 - சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மதுரவாயல் எஸ்.பி.பி. கார்டன்ஸில் நடைபெறுகிறது. இம்மணவிழா வரவேற்பு கழகப் பொருளாளர் - முன்னாள் ஒன்றிய அமைச்சர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கலைஞானி கமல்ஹாசன் எம்.பி. கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர்கள் ஐ. பெரியசாமி, முனைவர் க. பொன்முடி, மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என்.சிவா, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., டாக்டர் எச்.வி.ஹண்டே, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, முன்னாள் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மா. சுப்ரமணியன், பி.கே. சேகர்பாபு, எம்.எல்.ஏ., ஆவடி சா.மு. நாசர், டி.ஆர்.பி. ராஜா, முனைவர் கோவி. செழியன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன், என்.ஆர். இளங்கோ, தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., நல்ல குப்புசாமி, நீதிபதி (ஓய்வு) டி. முருகேசன், மாதவரம் எஸ். சுதர்சனம், காரம்பாக்கம் க. கணபதி, நொளம்பூர் ராஜன், டீக்கா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.




போலியோ இல்லா உலகத்தை உருவாக்கும் உயரிய நோக்குடன் விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தொகுதிக்குட்பட்ட மல்லாங்கிணறு பகுதியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து வழங்கும் முகாமில் முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று பச்சிளம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்துகளை வழங்கினார்.

### தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள

# புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகளில் சாதிச் சான்றிதழ்!

## மாநிலம் முழுவதும் விவாதத்தையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது

ஈரோடு, ஜூன் 29-

கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், மாணவர்கள் ஆண்டுதோறும் வருமானம், இருப்பிடம் மற்றும் சாதிச் சான்றிதழ்களைப் பெற அலுவலகங்களுக்கு அலைவதைத் தவிர்க்கும் நோக்கில் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார். முதல்கட்டமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த அட்டைகளில் மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களுடன் சாதிச் சான்றிதழ் தொடர்பான தகவல்களும் டிஜிட்டல் முறையில் இணைக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன. கல்வி உதவித்தொகை மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் அரசின் தரவுத் தளங்களில் பராமரிக்கப்படுவது அவசியமாக இருந்தாலும், அவற்றை மாணவர் அடையாள அட்டைகளுடன் இணைப்பது சமூக ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், "கல்விச் சலுகைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் தேவைப்படலாம். ஆனால், அவற்றை மாணவர்களின் அடையாள அட்டையுடன் இணைப்பது தேவையற்ற சமூக அடையாளப்படுத்தலுக்கு வழிவகுக்கும். பள்ளிகள் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் கற்றுத்தரும் இடங்களாக இருக்க வேண்டும்" ஆனால் மாணவர்களிடையே பாகுபாடு, உளவியல் அழுத்தம் மற்றும் சமூகப் பிரிவினை உணர்வுகள் உருவாகும் அபாயம் இருப்பதாக கல்வியாளர்கள் எச்சரித்துள்ளனர். ஏற்கனவே பள்ளிகளில் சாதி அடையாளங்களை வெளிப்படுத்தும் நடைமுறைகளைத் தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்த திட்டம் அதற்கு முரணானதாக அமையக்கூடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதியரசர் சந்துரு குழுவின் பரிந்துரைகள், பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களில் சாதி அடையாளங்களை குறைக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்ததாகவும், தற்போதைய திட்டம் அந்த நோக்கத்துடன் பொருந்துகிறதா என்பது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், திட்டத்தின் முழுமையான வழிகாட்டு நெறிமுறைகள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், அடையாள அட்டைகளில் சாதி விவரங்கள் எவ்வாறு இடம்பெறும் என்பது குறித்தும் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

நிர்வாக வசதிக்காக மாணவர் தகவல்களை டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைப்பதில் தவறில்லை என்றாலும், சமூக நல்லிணக்கத்தை பாதிக்காத வகையில் திட்டத்தை செயல்படுத்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே கல்வியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது என கூறினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு

# செஞ்சியில் இலவச கண் சிகிச்சை முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்

செஞ்சி, ஜூன் 29-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் செஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் முன்னிலை வகித்தார்.ஒருங்கிணைப்பாளர் ராஜ்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை தொடங்கி வைத்தார்.

முகாமில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை,நிர்வாகிகள் தொண்டரணி பாஷா, பிரபு கோகுல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி உனக்குள்ள விநாயகர் மருத்துவமனை கண் மருத்துவர்சிவா தலைமையிலான மருத்துவ குழுவினர் கலந்து கொண்டு கண்ணில் புரைநீக்குதல், கிட்ட பார்வை தூர பார்வை கண்ணில் நீர் அழுத்தம், மற்றும் கண்சம்பந்தமான நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் 250மேற்பட்ட நோயாளிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் ஜோசப் விஜய் தூங்கிக் கொண்டிருக்கிறாரா?

# லாட்டரி குடும்பம்தான் தமிழகத்தை ஆட்சி செய்கிறது!

## முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு!



தூத்துக்குடி, ஜூன் 29-

தமிழ்நாட்டை லாட்டரி குடும்பம் தான் இயக்கி ஆட்சி நடத்துகிறது என்று அனிதா ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார். தூத்துக்குடியில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்எல்ஏ நேற்று அளித்த பேட்டி: புதிய கட்சி ஆரம்பித்து ஆட்சிக்கு வந்தவர்கள், தங்களது கட்சியையே அதன் மாநில நிர்வாகி ஆதவ் அர்ஜுனா கைப்பற்றி விடுவாரோ என்ற பயத்தில் உள்ளனர்.

தற்போது தமிழகத்தில் எந்த ஒரு அறிக்கையும் ஆதவ் அர்ஜுனா பெயரில் தான் வருகிறது. தமிழ்நாட்டை ஒரு லாட்டரி சீட்டு குடும்பம் தான் பின்புலத்திலிருந்து இயக்கி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. இதனால் மீண்டும் தமிழகத்தில் லாட்டரி சீட்டு கலாசாரம் வந்துவிடுமோ என்ற அச்சம் பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

திமுக ஆட்சியில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று தற்போதைய முதல்வர் ஜோசப் விஜய் முன்பு கூறினார். ஆனால், இப்போது கோவையில் சிறுமி கொடூரக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம், சென்னையில் நடக்கும் தொடர் குற்றங்கள் எனத் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் கொலை, கொள்ளை, கஞ்சா மற்றும் சட்டவிரோத லாட்டரி விற்பனை தங்கு தடையின்றி நடைபெறுகிறது. தமிழ்நாடு முதல்வர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா? என மக்கள் மன்றம் கேள்வி எழுப்புகிறது.

தவெகவின் சாதாரண நிர்வாகிகள் கூட ரேஷன் கடைகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து சட்டவிரோதமாக ஆய்வு மேற்கொள்கிறார்கள். இதனைச் செய்யச் சொல்லி ஆதவ் அர்ஜுனா தான் உத்தரவிட்டிருப்பார் என்று தெரிகிறது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆன்லைன் மூலமாக வழங்கப்படும் ரூ.100 தரிசன டிக்கெட்டுகளில் பல கோடி ரூபாய் மோசடிகள் நடைபெற்றுள்ளன.

இதில் தொடர்புடைய அனைத்து அரசு அதிகாரிகள் மீதும் புதிய அரசு உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். என் மீதான சொத்து வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஊடகங்களில் செய்திகள் வருவது போல, தற்போதைய சூழலில் அமலாக்கத்துறை எனக்கு எந்தவொரு புதிய விசாரணை நோட்டீசும் வழங்கவில்லை. எனக்கு எந்தவிதமான நெருக்கடியும் சட்டப்படியாகக் கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### திருவல்லிக்கேணி 120வது வட்டம் பகுதி பிரதிநிதி

# எல்.பி.எப்.அமுல்ராஜ் இல்ல மணவிழா வரவேற்பு!

## கழக முன்னணியினர் வாழ்த்து!



சென்னை, ஜூன் 29-

திருவல்லிக்கேணி பகுதி 120வது வட்டம், பகுதி பிரதிநிதி எல்.பி.எப். அமுல்ராஜ்-யு.ஜமுனா ஆகியோரின் புதல்வி யு.கே. கீர்த்தனாவுக்கும், ஜி.ஜோசப் - ஜெ.ரஞ்சிதம் ஆகியோரின் புதல்வர் ஜெ.கில்பர்ட்க்கும் மண விழா தூத்துக்குடி பணி மய மாதா ஆலயத்தில் கடந்த 25ஆம் தேதி அன்று நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு இன்று (29.06.2026-திங்கள் கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, இராயப்பேட்டை, ஜானி ஜான்சன் ரோட்டில் உள்ள பிரசன்டேஷன் சர்ச் கம்யூனிட்டி ஹாலில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பில் மாவட்டக்கழக, பகுதிக் கழக வட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள், தொ.மு.ச. நிர்வாகிகள் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டு மணமக்கள் யு.கே.கீர்த்தனா- ஜெ.கில்பர்ட் ஆகியோரை வாழ்த்துகின்றனர்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டுசெஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாமை மாவட்டப் பொறுப்பாளர் – முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கிவைத்தார். உடன் ஒன்றியப் பெருந்தலைவர் விஜயக்குமார்,பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் உள்ளனர்.




தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் தலைமையில் நடைபெற்றது.உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.கலை கதிரவன் (தென்காசி)ஈ.ராஜா (வாசுதேவநல்லூர்) திலீபன் ஜெயசங்கர் (சங்கரன்கோவில்) மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர்.